# தொல்லியல் அறிஞர் ஜெ. ராஜாமுகமது

**முனைவர் உ. அலிபாவா**
பேராசிரியர் தமிழியல்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

ஜெ. இராஜா முகமது அவர்கள் வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், கட்டடக்கலை, செப்பேடுகள், சுவடியியல், மானுடவியல் ஆகிய துறைகளில் பெரும்புலமை பெற்ற நல்லறிஞர். 1968ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை 36 ஆண்டு காலம் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையில் பணியாற்றிப் பழுத்த அனுபவம் பெற்ற அறிஞரான டாக்டர் ஜெ. ராஜா முகமது அவர்கள் புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியராகப் பணியினைத் தொடங்கித் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறை உதவி இயக்குநராகத் தம் பணியினை நிறைவு செய்துள்ளார்.

வரலாறு, தொல்லியல், மானுடவியல் ஆகிய துறைகளில் முதுநிலைப் பட்டத்தினைப் பெற்றுள்ள அவர் சட்டப் படிப்பினையும் பயின்றுள்ளார். புதுவைப் பல்கலைக்கழகத்தில் 'சோழமண்டலக் கடற்கரை முஸ்லீம்களின் கடல்வாணிப வரலாறு' (Maritime History of the Coromandel Muslims) குறித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், இந்தி, அறபி மொழிகளில் புலமை பெற்றுள்ள அறிஞர் ஜெ. ராஜா முகமது அவர்கள் தென்னிந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் (South Indian History Congress), தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வுக் கழகம் (Tamil Nadu History Congress), தமிழகத் தொல்லியல் கழகம் (Tamil Nadu Archaeological Society), தென்னிந்திய நாணயவியல் ஆய்வுச் சங்கம் (South Indian Numismatics Society), தென்னிந்திய ஊர்ப் பெயராய்வுச் சங்கம் (Place Name Society of India), பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் சங்கம் (Association of British Scholars), இந்தியக் கலைப் பொருள் பாதுகாப்பு ஆய்வுச் சங்கம் (Association for Study of Conservation of Cultural Property), இந்தியக் கடல் வாணிப வரலாற்று ஆய்வுச் சங்கம் (Association of Maritime Scholars), ஜவேயுஊர் ஆகிய அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார். இவற்றின் வாயிலாகவும் தனிப்பட்ட முறையிலும் தொடர்ந்து இயங்கிவரும் அறிஞர் ஜெ. ராஜா முகமது அவர்கள் தம் பணிக்காலத்திலும் பின்பும் 100க்கும் மேற்பட்ட கண்காட்சிகளைத் துறை ரீதியாகவும் தனியாகவும் நடத்தியுள்ளார். பொது மக்களுக்கும் மாணவர்களுக்குமான வரலாற்று விழிப்புணர்வுப் பயிற்சிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். ஐம்பதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை நடத்தியுள்ள அவர் 30க்கும் மேற்பட்ட வானொலிச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். தமிழர் வரலாறு, இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், தொல்லியல், மானிடவியல், கடல் வாணிப வரலாறு, கல்வெட்டுகள்

குறித்த 100க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் பன்னாட்டு, தேசிய அளவிலான பல்வேறு கருத்தரங்குகளில் வழங்கியுள்ளார். இதன் மூலம் தமிழர்களின் வரலாறு, பண்பாடு குறித்த செய்திகள் பாமர மக்களுக்கும் ஆய்வு உலகத்திற்கும் சென்றடைந்துள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்ட கால மானிடவியல், கல்வெட்டியல், வரலாறு, சிற்பம் குறித்த பல புதிய கண்டுபிடிப்புகளையும் தொடர்ந்து செய்து வரும் அறிஞர் அவர்கள் மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், அருகிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து குறிப்பிடத்தக்க ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். அந்நிறுவனங்கள் நடத்தும் நிகழ்வுகளுக்கு வல்லுநராகவும் சிறப்பு அழைப்பாளராகவும் சென்று வரும் பெருமைக்குரியவர்.

புதுக்கோட்டை மாவட்டச் சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் அரசு நியமன உறுப்பினராகவும் புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழுவின் அரசு நியமன உறுப்பினராகவும் சாதிச் சான்றிதழ் சரிபார்ப்பு மாவட்டக் கூர்ந்தாய்வுக் குழுவின் அரசு நியமன மானிடவியல் வல்லுநராகவும் அனைத்துச் சமயக் கூட்டமைப்பான திருவருள் பேரவையின் மாநில செயற்குழு உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றி வருகிறார். 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வுக் கழகத்தின் கலை மற்றும் பண்பாட்டு அமர்வுக்குத் தலைமை தாங்கியுள்ளார். 2017ஆம் ஆண்டில் நடைபெற்ற தென்னிந்திய வரலாற்று ஆய்வுக் கழகத்தின் வரலாற்று வரைவியல் மற்றும் கடல் வாணிப வரலாற்று அமர்வுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

பல்வேறு கருத்தரங்குகளிலும் ஆய்விதழ்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வரைந்துள்ளார். மேலும் 13 நூல்களை எழுதியுள்ளார். அரசு அருங்காட்சியகத்துறை வெளியீடுகளாகப் பலநூல்கள் வெளிவந்துள்ளன.

தொல்லியல், வரலாறு, கல்வெட்டு, செப்பேடு, சுவடியியல் குறித்த ஆய்வுகளைக் கடந்த ஐம்பதாண்டுகளாகச் செய்து வந்தாலும் அந்த ஐம்பதாண்டுகளும் புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆய்வை முதன்மை ஆய்வாகக் கொண்டு நுணுகி ஆய்ந்து புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்துள்ளார். புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, தொல்லியல், செப்பேடு, நாணயம், சிற்பவியல் குறித்து மட்டும் இருபத்தைந்து ஆய்வுக் கட்டுரைகளையும் ஐந்து நூல்களையும் இயற்றியுள்ளார். அவை புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றையும் காலப் பழமையையும் பின்னோக்கி இழுத்துச் செல்லும் பெருமைக்குரியனவாகவும் சிறப்புக்குரியனவாகவும் திகழ்கின்றன. இருநூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளைக் கண்டறிந்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் குறித்துக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளும் இதில் அடங்கும்.

இளைய தலைமுறையினர் மற்றும் மாணவர்கள் நமது தொன்மைப் பண்பாட்டினைப் பேணி நடக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மரபுப் பயணங்களும் கல்வெட்டுப் பயிற்சி வகுப்புகளும் நடத்தித் தமிழ்ப் பண்பாடு செழிக்கப் பாடுபட்டு வருகிறார்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்களின் வரலாற்றுக்குச் சான்றாக விளங்கும் தொண்டைமான் மன்னர்களின் செப்பேடுகள் குறித்து 2009ஆம் ஆண்டு 'புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள்' எனும் நூலினை வெளியிட்டுள்ளார். இந்நூலினைத் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறை வெளியிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டக் கலை மற்றும் கட்டடக்கலை குறித்து 'Art of Pudukkottai' எனும் ஆங்கில நூலை 2003ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்நூலினைப் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகமும் புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக் காப்பகக் குழுவும் இணைந்து வெளியிட்டுள்ளது. இந்த நூல் புதுக்கோட்டை மாவட்டக் கலை மற்றும் கட்டடக்கலை வரலாற்றையும் அவற்றின் பழமையையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

புதுக்கோட்டை மாவட்ட நில அமைப்பு, எல்லை, ஆறுகள், மலைகள், கனிம வளங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கோயில்கள், குடைவரைக் கோயில்கள், பாறை ஓவியங்கள், நாணயங்கள், அயலார் படையெடுப்புகள், ஆட்சியமைப்புகள், இலக்கியங்கள், வரலாறு மற்றும் தொல்லியல் சான்றாதாரங்கள், ஊர்ப் பெயர்கள் உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கிய வரலாற்றுச் சான்றாதார நூலாகத் திகழும் ‘புதுக்கோட்டை மாவட்ட வரலாறு’ எனும் நூலை 1992ஆம் ஆண்டு அவர் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து எட்டுப் பதிப்புகளைக் கண்டுள்ள இந்நூல் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் புதுக்கோட்டை மாவட்டத்தின் காலப் பழமையை 2500 ஆண்டுகள் என்று நிறுவுகிறது.

‘1813 இல் புதுக்கோட்டை’ எனும் நூல் சுமார் 2000 ஏடுகளைக் கொண்ட, 1813 இல் எழுதப்பட்ட ஓலைச்சுவடியின் பாடமாகும். இதில் அக்காலப் புதுக்கோட்டை குறித்த பல்வேறு புள்ளி விவரங்கள் அடங்கியுள்ளன. இந்த ஓலைச் சுவடியினை இவர் தாமே படித்து முழுமையான பொருள் விளக்கம் அளித்துள்ளார். இந்நூலினைத் தமிழ்நாடு அரசின் அருங்காட்சியகத்துறை வெளியிட்டுள்ளது. சுவடியியல் புலத்திலும் அறிஞர் அவர்கள் புலமை வாய்ந்தவர் என்பது இந்நூலில் வெளிப்படுகிறது.

இவர் ‘கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான பண்டைய புதுக்கோட்டையின் வரலாறும் பண்பாடும்’ எனும் ஆய்வினைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மேற்கொண்டு நிறைவு செய்துள்ளார். இந்நூல் பண்டைய புதுக்கோட்டையின் இரும்புக்கால வரலாறு, படையல் பொருட்கள், இலக்கியங்களில் காணலாகும் பெருங்கற்காலப் பண்பாடுகள், கல்வெட்டுகள், பாறை ஓவியங்கள், நாணயங்கள், அரசு, வாழ்வியல், தொழில்கள், சிந்து சமவெளி நாகரிகத்துடனான தொடர்புகள் ஆகியன இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பாறை ஓவியங்களைக் கண்டறிந்து இந்நூல் பதிவு செய்கின்றது. இவ் ஓவியங்கள் 5000 ஆண்டுகள் பழமை மிக்கன என அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இந்நூலில் காலத்தால் தொன்மை மிக்க புதுக்கோட்டை மாவட்டம் சிறிய எல்லைப் பகுதியினையுடையது. அப்பகுதியை மிக நுட்பமாக ஆராய்ச்சி செய்து பல உண்மைகளை வெளிக்கொண்டு வந்ததில் இவரது பங்கும் பணியும் மிகுதியானதாகவும் முதன்மை வாய்ந்ததாகவும் திகழ்கின்றது.

சிந்துவெளி நாகரிகத்திற்கு நிகரான உயரிய நாகரிகம் தமிழ் நாகரிகம் என்பதை அறிஞர் அவர்கள் இந்த ஆய்வில் காட்டுகிறார். இரும்புக் காலத்திலிருந்த இப்பகுதியின் தொன்மை வாணிகத் தொடர்புகளையும் தமது ஆய்வில் அவர் காட்டுகிறார். சிந்து வெளியில் கண்டறியப்பட்ட பானைக் குறியீடுகளும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ள பானைக் குறியீடுகளும் ஒன்றாக உள்ளன என அவர் நிறுவியுள்ளார். புதுக்கோட்டை மாவட்டம் தொடர்பாக அவர் நிகழ்த்தியுள்ள ஆய்வுகளின் மூலமாகப் பெறப்பட்ட முடிவுகளும் கண்டுபிடிப்புகளும் தமிழக வரலாற்று ஆய்வுக் கழகத்தின் ஆய்வேட்டிலும் தமிழகத் தொல்லியல் கழகத்தின் ஆவணம் இதழிலும் தமிழ் ஆங்கில நாளிதழ்களிலும் வெளிவந்துள்ளன. அவற்றைப் பார்த்து அறிஞர் உலகமும் ஏற்பளித்துள்ளன.

நாகப்பட்டினம் தொடங்கி கன்னியாகுமரி வரை புத்தர் சிலையே இல்லை என்று 1954இல் இருந்த நிலையினை மாற்றும் வண்ணம் இவர் புதுக்கோட்டைப் பகுதியில் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு புத்தர் சிலைகளைக் கண்டுபிடித்து இப்பகுதியில் நிலவிய புத்தமதத் தொடர்பை வெளிப்படுத்தியிருப்பதோடு அக்காலப் பன்னாட்டு வணிகத் தொடர்பினையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

1. கற்சிலைகள் பல 17.8.1994இல் புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டறியப்பட்டது. அத்துடன் கிடைத்த கல்வெட்டில் முதலாம் குலோத்துங்கச் சோழன் 30 ஆண்டுகள் ஆட்சி செய்தான் எனும் குறிப்புப் புதியதாக வெளிக்கொணரப்பட்டது. இக்கல்வெட்டும் சிலையும் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

2. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஒலியமங்கலத்தில் சங்க காலத்தை ஒட்டிய பானை ஓடுகளையும் 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலக் கல்வெட்டுகள் நான்கினையும் இவர் 4.8.2003இல் கண்டறிந்து பதிவு செய்துள்ளார்.
3. புதுக்கோட்டை மாவட்டக் கடற்கரைக் கிராமமான மணல்மேல்குடியில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிலை 17.5.2002 அன்று அவரால் கண்டறியப்பட்டதன் மூலம் தமிழகத்தில் புத்தமதம் குறித்தும் இடைக்காலத்தில் தமிழகக் கடல் வாணிப வரலாறு குறித்தும் புதிய தரவுகள் கிடைத்துள்ளன.
4. கல்லெழுத்துகளும் அனுமன் உருவமும் பொறிக்கப்பட்ட அறந்தாங்கித் தொண்டைமான்கள் குறித்த பழைமையான கல்தூண் ஒன்றினை 20.4.2000 அன்று அவர் கண்டறிந்துள்ளார்.
5. புதுக்கோட்டை நகரத்திலுள்ள அடப்பன் குளத்தில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த உலோக முத்திரை (ஆநவயட ளூநயட) ஒன்றினைக் கண்டறிந்துள்ளார். அதில் பிராமி எழுத்தும் வட்டெழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன.
6. குடுமியான் மலைப் பாறை ஓவியத்தைக் கண்டறிந்ததற்காக 2014இல் வுயஅடையேனர ர்ளைவழசல ஊழபெசநளள இவருக்குச் சிறந்த வரலாற்றுக் கண்டுபிடிப்பிற்கான விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
7. பண்டைய புதுக்கோட்டையின் வரலாறும் பண்பாடும்’ என்னும் தமது ஆய்வில் அவர் புதுக்கோட்டையின் தொன்மை வரலாற்று மேல் எல்லை சுமார் கி.மு. 500 என்று கொள்ளப்பட்டு வந்த கருத்தை மீளாய்வுக்குட்படுத்தியுள்ளார். அதன் மூலம் வியக்கத்தக்க முடிவு எட்டப்பட்டுள்ளது. அதில், குடுமியான் மலையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பாறை ஓவியங்களின் பண்பு அடிப்படையில் இப்பகுதியின் தொன்மை வரலாற்றின் மேல் எல்லையைக் கி.மு. 3000க்குக் கொண்டு சென்றுள்ளார். இது தமிழக வரலாற்றின் தொன்மையைச் சிந்து சமவெளி நாகரிகத்தின் தொன்மைக்கு இணையாக எடுத்துச் செல்கிறது. அந்த வகையில் இந்த ஆய்வின் மூலம் தமிழக வரலாற்றின் தொன்மையை நிரூபிப்பதற்கு அவர் பெருந்தொண்டாற்றியுள்ளார் என்பது தெரிய வருவதோடு தமிழகத் தொல்லியல் வரலாற்றில் மைல் கல்லாகத் திகழும் ஆய்வினை நிகழ்த்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.
8. தென்னிந்தியாவில் வாழ்ந்த தொல்குடி மக்கள் யார் என்பது குறித்துப் பல்வேறு கால கட்டங்களில் பலவிதமான கருத்துகள் சொல்லப்பட்டு வந்துள்ள நிலையில் தமிழகத்தின் தொன்மைக்கால மேல் எல்லையினை கி.மு. 3000 என வரையறை செய்யும்போது இக்காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் இந்தியாவிலும் நிலவிய நாகரிக சமுதாயத்தைப் போன்று புதுக்கோட்டை மக்களும் நாகரிகச் சிறப்போடு வாழ்ந்திருக்க வேண்டுமென்ற கருத்தினை வலுவாக முன்வைத்து நிறுவுகிறார். இக்காலத்தில் சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்களின் இனக்குழுவினைச் சார்ந்தவர்களே இங்கும் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்களும் திராவிட இனத்தைச் சார்ந்த இனக்குழு மக்களே ஆவர். அந்த வகையில் இங்கு வாழ்ந்த மக்களும் இந்நாட்டுப் பூர்வ குடிகளான திராவிடர்களே எனவும் நிறுவுகிறார்.
9. ஏனைய பகுதியில் சிறந்து விளங்கிய நாகரிகத்தைப் போன்று, இப்பகுதியிலும் சுயமாக வாழ்ந்து நாகரிக வளர்ச்சி கண்ட திராவிடச் சமுதாயமாக வாழ்ந்து வந்த நாகரிகம் ஒன்று இருந்தது எனக் கொள்வது ஏற்புடையதாக அமையும் என்பதை அவர் தமது ஆய்வில் வலியுறுத்தியுள்ளார். சமீப ஆண்டுகளில் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வுகளின் மூலம் எட்டப்பட்டுள்ள கருத்துக்கு ஏற்பவும் புதுக்கோட்டைப் பகுதியின் வரலாற்றின் மேல் எல்லையை, கி.மு. 3000 எனக் கொள்வதும் இங்கு வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தவர் என்பதும் புதுக்கோட்டையின் வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் புதிய கருத்தாக்கம் ஆகும்.
10. புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளிலுள்ள குறியீடுகள் சிந்து சமவெளியில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளிலுள்ள குறியீடுகளை ஒத்துள்ளன எனக் கண்டறிந்து வெளியிட்டுள்ளார்.
11. புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் சிந்து சமவெளி நாகரீகத்திற்கும் வணிகத் தொடர்பு இருந்தமைக்கான சான்றுகளைத் தமது ஆய்வில் கண்டறிந்து வெளியிட்டுள்ளார்.

12. தற்போது ‘Folk Arts and Culture of Pudukkottai’ (புதுக்கோட்டை மாவட்ட சிறுதெய்வ வழிபாடும் பண்பாடும்) எனும் தலைப்பில் ஐஊர்சு நிதி உதவியுடன் ஆய்வு செய்து வருகிறார்.
13. புதுக்கோட்டை மாவட்ட வரலாறு, தொல்லியல் தொடர்பான நூல்கள் தவிர,
    1. A Handy Guide to the Pudukkottai Government Museum.
    2. The Role of Muslims in the Indian Freedom Struggle 1857 - 1947.
    3. Maritime History of the Coromandel Muslims : A Socio - Historical Study in The Tamil Muslims 1750 - 1900.
    4. Islamic Architecture in Tamil Nadu.

ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் அவரது தமிழ்ப் பணியினையும் சமூகப் பணிகளையும் பாராட்டிப் பட்டயம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவ்வாறான பல்வேறு பணிகளைச் செய்து பல்வேறு சிறப்புகளையும் பெற்றுத் திகழும் அவர் 100 ஆண்டு பழமைமிக்க புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் பல புதுமைகளைச் செய்தவர். பல்வேறு தொல்லியல் சின்னங்களைச் சேகரித்து வந்து காட்சிக்கு வைத்தவர். தம் வாழ்நாள் முழுவதையும் வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல் துறைகளுக்காகச் செலவிட்டு, பல்வேறு பெரும் ஆய்வுப் பணிகளைச் செய்து வருபவர். பண்டைத்தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் பற்றிய புதிய கருத்துகளை இவரது ஆய்வுகள் வெளிப்படுத்துவதுடன் உலகளவில் ஏற்றுப் போற்றப்பெறும் தகைமையினை யுடையனவாகவும் இருக்கின்றன. தமிழ்நாடு அரசின் கோட்டை அமீர் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு விருதுகளைப் பெற்றுள்ள பெருமைக்குரியவர். அவருடைய ஆய்வுக்கூர்மையையும் புலமையையும் அறிந்து போற்றுவது தமிழ்கூறு நல்லுலகின் அருங்கடன்.